முதன்மை சார்பு நீதிமன்றம் – திருச்செங்கோடு
முன்னிலை. திரு. D.மோகன்குமார், B.Com., M.L.,
முதன்மை சார்பு நீதிபதி, திருச்செங்கோடு
2025–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் வியாழக்கிழமை

I.A. 3/2024 in OS.No.275/2023

வி.இளங்கோவன் … மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

பி.விஜயகுமார் … எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்னர் 06.02.2025 அன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ்.முருகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் முன்னிடப்பட்ட வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் கடந்த 22.03.2024ம் தேதியில் மனுதாரருக்கு எதிரான ஒருதலைபட்ச உத்திரவினை ரத்து செய்யவேண்டி மனு தாக்கல்.

2) மனுவின் சுருக்கம் :

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி அசல் வழக்கு கடனுறுதி சீட்டு அடிப்படையில் கொடுத்த கடன் தொகையை திரும்ப வசூலிக்க கோரி தாக்கல் செய்த வழக்காகும். இவ்வழக்கானது கடந்த 22.03.2024ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி தரப்பு பதிலுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால் மேற்படி 22.03.2024ம் தேதியில் மனுதாரரின் வருகையின்மை மற்றும் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரருக்கெதிராக ஒருதலை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்திரவினை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுவில் மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்வதற்கு தகுந்த காரணத்தை குறிப்பிடாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்யும் நோக்கத்தில் சரியான காரணத்தில் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், பிரதிவாதி வேண்டுமென்றே 71 வயதான மூத்த குடிமகனை அலைகழிக்க வேண்டுமென்றே கெட்ட நோக்கத்தோடு இந்த மனுவை தாக்ல செய்துள்ளது வழக்கினை காலதாமதப்படுத்தி வருகிறார். வாதியிடம் பெற்ற ரூ.2 லட்சம் கடன் தொகையை வாங்கவில்லை என்றும்,கடனுக்காக எந்தவித புரோ நோட்டும் வழங்கவில்லை என்றும் மனுதாரர் கூறினாலும், கடந்த 26.02.2024ம் தேதியில் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் மக்கள் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த நிலையில் பிரதிவாதி கடன் தொகையை வாங்கவில்லை என்றும், எந்த கடனுறுதி சீட்டும் கொடுக்கவில்லை என்று கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பான சங்கதி என்பதால் இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இந்த மனுவில், மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடுசெய்யப்படவில்லை.

**5)** மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

<u>6) தீர்வு :</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மேற்படி அசல் வழக்கு கடனுறுதி சீட்டு அடிப்படையில் கொடுத்த கடனை திரும்ப வசூலிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மனுதாரரின் சங்கதிப்படி, அசல் வழக்கில் கடந்த 22.03.2024ம் தேதி பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தேதியில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்திரவினை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் எதிர்மனுதாரர் மனுதாரர்/பிரதிவாதிக்கு மேற்படி தேதியில் உடல்நிலை சரியில்லை என்பதால் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும்,

பதிலுரை தாக்கல் செய்வதற்கு தகுந்த காரணத்தை பிரதிவாதி குறிப்பிடாமல் காலம் தாழ்ந்தத வேண்டுமென்றே பிரமாணபத்திரிக்கையில் குறிப்பிடவில்லை என்று தெரிவித்துள்ளார். வழக்காவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் நீதியின் நலன் கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கிட வேண்டியும், வழக்கினை இருதரப்பிலும் விசாரித்து முடிக்க வேண்டியிருப்பதாலும் இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

1. மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட அலைகழிப்பு, காலவிரையம், செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அடுத்து வரும் வாய்தாவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ ரூ.2000/- மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் மனுவின் நிலை தானாக தள்ளுபடியாகிவிடும்.

2 காலநீட்டிப்பு மனு தாக்கல் செய்ய அனுமதியில்லை.

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 27.02.2025.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025 ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.02.06 10:57:56 +0530

முதன்மை சார்பு நீதிபதி
திருச்செங்கோடு

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.02.06 10:58:03 +0530

முதன்மை சார்பு நீதிபதி
திருச்செங்கோடு

முதன்மைசார்புநீதிமன்றம், திருச்செங்கோடு.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 03/2024 ன்
அ.வ.எண்.275/2023 -- 06.02.2025